# வாடகை நிவாரணம் இதோ

நீங்கள் ஒரு ரொறன்ரோக் குடியிருப்பாளராக இருப்பதுடன், உங்கள் வாடகையைச் செலுத்துவதற்குப் பின்தங்கியிருந்தால் அல்லது உங்களுக்கு மிகவும் கட்டுப்படியாகும் அல்லது பொருத்தமான ஒரு குடியிருப்புக்கான முதல் மற்றும் கடைசி மாத வாடகைக்கு உதவி தேவைப்பட்டால், நீங்கள் ரொறன்ரோ வாடகை வங்கியின் (Toronto

Rent Bank) மானியம் பெறத் தகுதியுடையவராக இருக்கலாம்.

பின்வரும் நிலைமைகளில் ரொறன்ரோ வாடகை வங்கி மானியத்திற்கு நீங்கள் தகுதி பெறக்கூடும்:

- நீங்கள் ரொறன்ரோவில் வசிக்கின்றீர்கள்
- நீங்கள் குறைந்த வருமான வரையறைகளுக்குள் இருந்தாலும், சமூகநல உதவி* பெறவில்லை
- நீங்கள் வழமையான சந்தை நிலவரப்படி வாடகையைச் செலுத்துகின்றீர்கள்
- இத் திட்டத்தின் ஏனைய அனைத்துக் கோரிக்கைகளையும் நீங்கள் நிறைவு செய்கின்றீர்கள்

*சமூகநல உதவி பெறுபவர்கள் தங்கள் ஒன்ராறியோ வேர்க்ஸ் (Ontario Works - OW) அல்லது ஒன்ராறியோ இயலாமை ஆதரவுத் திட்டம் (Ontario Disability Support Program - ODSP) அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு வீட்டை நிலைப்படுத்திக்

கொள்வதற்கான நிதி பற்றிக் கேட்கலாம்.

## மேலதிகத் தகவல்களுக்கு:

416-397-RENT (7368)

திங்கள் முதல் வெள்ளி முப 8:30 முதல் பிப 4:30 வரை

toronto.ca/rentbank



# ரொறன்ரோ வாடகை வங்கி என்றால் என்ன?

ரொறன்ரோ நகரம் மற்றும் Neighbourhood Information Post (NIP) ஆகியவற்றின் இணைப்பாகிய ரொறன்ரோ வாடகை வங்கியானது, வாடகை செலுத்துவதற்குத் தாமதிக்கும் அல்லது வாடகை வைப்புப் பணத்துக்கு உதவி தேவைப்படும் தகுதியான ரொறன்ரோக் குடியிருப்பாளர்களுக்கு மானியங்களை வழங்குகின்றது. வீடுகளை இழக்கும் அபாயத்தில் உள்ள மக்கள் தங்கள் வீடுகளில் தங்குவதற்கு ஆதரவளிப்பதையும், வீடுகளை இழக்காது தடுப்பதையும், இந்த மானியங்களை வழங்குவதன் மூலம் ரொறன்ரோ வாடகை வங்கி உறுதி செய்கின்றது.

COVID-19 நோய்த்தொற்றின் போது, குறைந்த வருமானம் கொண்ட தனிநபர்கள் மற்றும் குடும்பங்களின் தேவைகளை மிகவும் சிறப்பாக நிவிர்த்தி செய்யக்கூடிய வகையில் ரொறன்ரோ வாடகை வங்கி, திட்ட மாற்றங்களைச் செய்துள்ளது. இவற்றுள் அடங்குவன:

- தகுதிக்கான வருடாந்தக் குடும்ப வருமானத்தின் வரையறைகளை அதிகரித்தல்
- ரொறன்ரோ வாடகை வங்கியின் அனைத்து கடன் மீளச் செலுத்துதல்களையும் முடக்குதல்

toronto RENTBANK

NIP

TORONTO

Call 3·1·1

